RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s512

OPEN ACCESS

# தந்தை பெரியாரின் மானுடம் தழுவிய கோட்பாடுகள்

ப. கமலக்கண்ணன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு-638004, தமிழ்நாடு, இந்தியா.

# Thanthai Periyar's Humanistic Principles

P. Kamalakannan [a, *]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode-638004, Tamil Nadu, India

* Corresponding Author: kamalan1964@gmail.com

Received: 03-08-2021
Revised: 20-04-2022
Accepted: 27-04-2022
Published: 13-07-2022

Check for updates

## ABSTRACT

Father Periyar was a great personality of Tamil Nadu. Who developed a theoretical definition of the struggle for social justice? Periyar's ideas will give a new impetus not only to yesterday, but also to future activists. This article is written to highlight Periyar's views, especially on art, literature and culture, and to raise awareness for future generations. This article examines Periyar's humanitarian theory, Periyar's unique contributions to the struggle for social justice, and Periyar's views on art literature. It seeks to explain the purpose for which Periyar worked to create a harmonious society, and how he historically assessed the culture, worship traditions, and mythology of Tamil Nadu. This study addresses the need for the development of periology as a theory from a sociological perspective. Thus, this study seeks to establish that Periyar is the one who belongs to all time.

**Keywords:** Periyar, Social Justice, Society, Tamilism, Discrimination, Renaissance, Humanism, Equality, Humanity, Reform, Self-Respect, Dravidian Concept

## முன்னுரை

சமூகவியல் என்பது மனித ஒழுக்கங்களுடன் தொடர்புடையது. இது சமயம், பண்பாடு, அறிவியல், அரசியல், நாட்டுப்பற்று முதலியவற்றின் அடிப்படையில் இணைந்து செயல்படும், வாழும் மக்களின் கூட்டம் எனவும் கருதுவர். இத்தகையக் கட்டமைப்பு என்பது ஒவ்வொரு காலகட்டத்திலும் பல்வேறு மாற்றங்களை உருவாக்கியுள்ளது.

மனித சமுதாயத்தில் தொடக்கக் காலங்களில் பிரிவுகள் என்பது இல்லை. சங்க காலத்தில் நிலவழியும் தொழில் வழியும்தான் மக்கள் பெயருக்கு அடிப்படையாய் அமைந்தன. தொழில் அடிப்படையில் பல குடிகள் இருந்தன. இவையும் அவரவர் மேற்கொண்ட தொழில் வழி ஏற்பட்டவையாகும் (Aravanan, 1995).

சங்க காலத்தில் நிலம், தொழில், பண்பு, சிறப்பு குறித்து உண்டானப் பெயர்கள் காலப்போக்கில் சாதிப் பெயர்களாக மாறிவிட்டன என்று கூறுவர். கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் ஆரியர் விந்தியம் தாண்டி தென் மாநிலங்களில் பரவத் தொடங்கியது முதல் பிறப்பு சாதி முறையானது வேரூன்றியது. இதன் வரலாற்றுக் கூறுகளைத் தக்க ஆதாரங்களுடன் இராமன் கதை, புராணம் வரலாறு விரிவாக நமக்கு எடுத்துரைக்கின்றது.

இவ்வாறு தொடக்க காலங்களில் இலைமறைக் காயாகப் பிரிவுகளற்ற அமைப்பாக விளங்கி வந்த தமிழர்கள் பின்னர் வேறுபாடுகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். நாளடைவில் பண்பாடு, நாகாரிகம், இலக்கியம், மொழி, கலை போன்ற அனைத்துத் துறைகளிலும் இத்தகைய ஊடுருவல்கள் தலைகாட்டின. தமிழினம் விழிப்புணர்வு பெற்று மற்றச் சமுதாயத்தினரைப் போல மேன்மை நிலை எய்திட வேண்டுமானால் பாகுபாடுகளைக் களைந்து எறிவதே முதல்பணியாக இருக்க வேண்டியதை நன்குணர்ந்து செயலாற்றினார் தந்தை பெரியார்.

## சமூகவியல் அறிஞர்

தந்தை பெரியாரின் சமூகவியல் பார்வையானது பரந்துபட்டதாகும். மாந்தரின் பிறப்பில் உயர்வு தாழ்வுக் கற்பிப்பதை அழித்தொழிக்கும் நோக்கம் கொண்டதாகும். மதங்களும், வேதங்களும் இதிகாசப் புராணங்களைப் போதிப்பதன் மூலம் மனிதர்களிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்தும் அனைத்தையும் எதிர்த்தார் புதிய உலகைக் கட்டமைத்துச் சமுதாயத்தில் மறுமலர்ச்சியை உருவாக்க முற்பட்டார்.

மனிதன் தான் வாழும் சமூகத்தின் அங்கமாகத் தான் கற்றவற்றைத் தன் இனத்துக்கும் தன் வழித்தோன்றல்களுக்கும் கற்பிப்பதையே மாற்றம் எனலாம். மனிதனின் பண்பாட்டுக் கூறுகளாகப் பல்வேறு கூறுகளை எடுத்துக் காட்டலாம்.

- கோயில்கள்
- கலைகள்
- வழிபாட்டு நெறிகள்
- விழாக்கள்
- நம்பிக்கைகள்

போன்றவற்றின் வாயிலாக நமது நாட்டின் பண்பாடு எவ்வாறு அமைந்திருந்தன என்றும் அவற்றை தந்தை பெரியார் சமூகவியல் கண்ணோட்டத்தோடு எவ்விதம் அணுகினார். என்றும் அவற்றை வரலாற்றுச் சான்றுகளோடு எவ்வாறு மறுமதிப்பீடு செய்தார் என்பதையும் நம்மால் அடையாளப்படுத்த முடியும்.

தமக்குக் கிடைக்கும் வருமானத்தில் பெரும்பகுதியைக் கிராம மக்கள் கோவிலுக்காகச் செலவழித்துவிட்டுப் பிறகு அவதியுற்றுப் பொருளியல் சிரமத்திற்கு உள்ளாவதற்குக் கோவில்களையே காரணமாகக் காட்டும் பெரியாருக்கு எந்தக் கலைகளும் மனித வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதை விரும்பவில்லை என்றே தோன்றுகிறது. கலைகள் தொடக்க காலங்களில் எழில் உணர்வுடனும் அடுத்த கட்டங்களில் பொழுது போக்குச் சாதனங்களாகவும் பிறகு பிரச்சாரக் கருவிகளாகவும் பயன்பட்டன. ஆனால் எதையும் சீர்தூக்கிப் பார்க்கும் பெரியாரின் எதிர்பார்ப்பு வேறுவிதமாக உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழனத்தைப் பழைமைப் பிடியிலிருந்து விடுவித்து பகுத்தறிவுப் பாதையில் தன்மானத்தோடும் இனமானத்தோடும் பயணிக்கச் செய்தவர். பகுத்தறிவை அளவுகோலாகக் கொண்டு வாழ்வின் பல்வேறு இயல்புகளையும் நிலைகளையும் அமைப்புகளையும், சூழல்களையும் ஆராயந்து உண்மைகளைக் கண்டறியத் தூண்டியவர்.

நடுங்கும் வயதிலும், தளராத கொள்கைப் பிடிப்பு உள்ளவராய் சமுதாயத்தில் சிந்தனைப் புரட்சியையும், மறுமலர்ச்சியையும் உண்டாக்க அரும்பாடுபட்டவர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

## மனிதநேயக் கோட்பாடு

பெரியாரின் பணிகளின் அடித்தளம் மனிதநேயமாகும். மனித நலத்தையே முதன்மையாகக் கருதினார். மனித உரிமைகள் எந்த வகையில் பாதித்தாலும் அதனைக் களைந்து எறிய வேண்டும்

என்பதில் முனைப்பாக இருப்பவர். மனித மாண்பையும் சமனியத்தையும் நிறுவுவதை இலக்காகக் கொண்ட உலகு தழுவிய அறிவியல் சுயமரியாதைக் கோட்பாட்டாளராக விளங்கிய பெரியாரின் நமக்கு அளித்துச் சென்ற கொள்கையாகும்.

"எனக்கு வளர்ச்சியே முக்கியமாகும்.

எனக்கு வேறு எந்த அபிமானமும் கிடையாது.

எனக்கு வெறும் மனிதாபினம் தான்.

அதுவும் வளர்ச்சி அபிமானம் தான் முக்கியம்"

என்று தன்னைத் தானே சுயமாக அறிமுகப்படுத்திக் கொள்கிறார் (Periyar, 1963).

மனிதநேயத்தை மறவாத இனப்பற்று, மனிதத்திற்கு மதிப்பளிக்கும் சமத்துவம், சாதியற்ற சமுதாயத்திற்கு வழியமைக்கும் வகுப்புவாரி உரிமை, மெய்ம்மையை உள்ளடக்கிய பகுத்தறிவு என்று உலகத்தோடு ஒட்டிய தொலைநோக்குப் பார்வையாளராக விளங்கினார்.

"ஈ. வெ. ராமசாமி என்கிற நான் திராவிடச்

சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள

மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும்

அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும்

தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே

பணியாய் இருப்பவன்"

மானுடம் தழுவிய அவருடைய இலக்கின் பொது வடிவத்தோடு அதன் தனி வடிவையும் இணைத்து தனது வாழ்நாள் பணிகள் இன்னதெனப் பெரியார் எழுதி வைத்துள்ளதாகவே தெரிகிறது (Periyar, 1963).

அனைத்து மக்களும் வாழ வேண்டும், மனித வாழ்வு வளம் பெற வேண்டும். சிலர் உயர்ந்தவர் பலர் தாழ்ந்தவர் என்ற நிலை மாற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணங்களுடன் ஒன்றியிருப்பது பெரியாரின் மகத்தானப் பணிகளாகும்.

## பெரியாரின் பணிகள்

பெரியார் பகுத்தறிவுவாதியாக மட்டுமல்லாமல் தலைசிறந்த சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தவர். சீர்திருத்தம் என்றால் என்ன? என்ற வினாவுக்குப் பெரியார் கூறும் பதில் சிந்திக்கத்தக்கதாக உள்ளது.

"சீர்திருத்தங்கள் மக்களுக்கு ஒழுக்கத்தைக்

கற்பிக்கவும், அறிவை விரிவுபடுத்தவும்

உயிர்களிடத்து அன்பும், இரக்கமும் காட்டவும்

சமத்துவத்தையும், சுயமரியாதை உணர்வையும்

அதிகபடுத்தவுமே அமைய வேண்டும் என்கிறார்"

சீர்திருத்தம் என்பது தேவையில்லாதவற்றை நீக்கிவிட்டுத் தேவையானதை மட்டும் வைத்துக் கொள்ளுதலாகும் (Periyar, 1963). எந்த நிலையிலும் எப்போதும் எதிலும் மயங்கிடவோ விருப்பம் கொள்ளவோ, இயக்க வளர்ச்சிக்குக் கேடு உண்டாக்கவோ அவரது வாழ்க்கை அமையவில்லை. மேலும் கல்வி குறித்து பெரியார் மிகுந்த கவனத்துடன் பல்வேறு பயனுள்ள கருத்துகளை வழங்கியிருக்கிறார். மக்களைத் தன்மானமுடையவர்களாக்கச் சரியான கல்விமுறையைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்பினார் (Periyar, 1963).

1 கல்வியால் மக்களுக்குப் பகுத்தறிவும், சுயமரியாதை உணர்வும் ஏற்பட வேண்டும்.
2 மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் உணவு, உடை, உறைவிடம் எப்படி இன்றியமையாததோ அதேபோல் கல்வி என்பதும் இன்றியமையாதது.

நமது கல்விமுறை மாற வேண்டும். படிக்கும் போதே எந்தத் தொழிலும் பயில வேண்டும் எந்த வகுப்பில் படிப்பை நிறுத்தினாலும் அவர்கள் தொழில் செய்து பிழைக்கக் கூடியவராக இருக்க வேண்டுமென்று பெரியார் தொலைநோக்குச் சிந்தனை உடையவராக விளங்கினார்.

"பொதுமக்களின் தேவைக்கும் சவுகாரியத்துக்கும்

நன்மைக்கும் அவசியமென்று கருதப்படும்

உற்பத்தி செய்யப்படும் பொருட்களின்

தொழிற்சாலைகள், இயந்திர சாலைகள்

போக்குவரத்துச் சாதனங்கள் அரசாங்கத்தாலேயே

நடைபெற வேண்டும்"

பெரியாரின் பணிகளில் கல்வியும், வேலைவாய்ப்பும் முக்கியமானதாகக் கருதப்பட்டது (Nannan,1993).

## வள்ளுவ அறநெறி

வாழ்க்கைக்கு இலக்கணமாகத் திகழும் திருக்குறளைக் தொடக்கக் காலங்களில் பெரியார் கடுமையாகக் குறை கூறியுள்ளார் அதற்குக் காரணம் குறளுக்கு ஆரியரும், ஆரிய உணர்ச்சியுள்ள மதவாதிகளும் எழுதிய உரைகளை உண்மையென்று எண்ணியதுதான் என்று பெரியாரே கூறுகிறார்.

பிற்காலத்தில் குறளானது இந்து மதக் கொள்கைகளை, சாதிப் பிரிவினையை மறுக்கும் நூலாக விளங்குகின்றது என்று கூறுகிறார். சிலம்பின் பதிகத்தில் வருகின்ற "ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பதூம்உம்" என்ற கருத்தை மையமாகக் கொண்டு பழம்பிறப்பு, விதி போன்ற பலவற்றை நம்பச் செய்கிறது. மணமக்கள் திருமணம் வைதிக நெறிப்படி நடக்கிறது.

"மாமது பார்ப்பான் மறைவழிக் காட்டிடத்

தீவலம் செய்வது"

மணிமேகலை காப்பியத்தைப் பற்றி பெரியார் அதிகமாக விமர்ச்சிக்க வில்லையென்றே கூறலாம்.

- உருவ வணக்கத்தைக் கண்டிக்கிறது
- ஏழைகளுக்கு உணவு அளிக்கிறது
- பரத்தை ஒழிப்பை வலியுறுத்துகிறது
- மது ஒழிப்பு
- சிறை ஒழிப்பின் அவசியம்

போன்ற பல்வேறு சமூகம் சார்ந்தக் கருத்துகளைப் பேசுவதே இதற்குக் காரணம் (Thirunavukkarasu, 1977). புராணங்களால் இலக்கியத்திற்கும் தமிழகத்திற்கும் யாதொரு பயனும் இல்லையென்றே கூறுகிறார். கந்த புராணம், பெரிய புராணம், தல புராணங்கள் போன்ற பல்வேறு புராணங்கள் குறித்து கற்பனைகளை எடுத்துக்காட்டி இவை வாழ்க்கைக்கு உதவாது என்கிறார்.

முக்கியமாக நான் இராமாயணத்தைப் பற்றி எடுத்து கூறுவதற்குக் காரணம். அது பொய்க் களஞ்சியமாகும். இராமாயணம் திராவிட மக்களை இழிவு செய்து ஆரியர்களைத் தெய்வங்களாக்க உருவானது (Periyar, 2007).

பாரதத்தில் திரவுபதி என்ற பெண் அய்ந்து பேருக்கு மனைவியாக வாழ்வது ஒழுக்கக்கேடு, நெறிபிறழ்வு அருவருக்கத்தக்க கூறுகள் கொண்டதாக உள்ளது என்பன போன்றக் கருத்துக்கள் பெரியாருடையதாகத் தெரிகிறது.

## சித்தர்கள்

17, 18 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சித்தர்கள் சமயங்களைப் பொதுமை உணர்வுடன் அணுகினர்.

- ❖ கடவுள் பெயரால் நடந்த சடங்குகளைக் கண்டித்தனர்.
- ❖ உருவ வழிபாட்டை மறுத்து அருவ வழிபாட்டை வரவேற்றனர்.
- ❖ சமூக ஏற்றத்தாழ்வை வெளிப்படையாக நீக்கினர்.

19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலார் சமய சமூக, பொருளாதார மறுமலர்ச்சியை எடுத்துக் கூறியவர். இவர் சாதி, குலம், இனம், மொழி, சமயம் என்ற குறுகிய எல்லைகளுக்கு அப்பாற்பட்ட சீர்திருத்தவாதியாகத் திகழந்தவர்.

சாதி, குலம், ஆஸ்ரமம், ஆசாரம் எல்லாம் பிள்ளை விளையாட்டு என்ற வள்ளலாரின் கருத்தும் சாதி, குலம், ஆசாரம், சடங்கும் அனைத்தும் புரோகிதர் கற்பனையே என்ற பெரியாரின் கருத்தும் ஒப்பு நோக்கத்தக்கவையாகும்.

மேற்கண்ட ஆய்வின் மூலம் பயன்பாட்டுக் கொள்கையானது பெரியாரிடம் எவ்வாறு வெளிப்படுகிறது?

பெரியாரின் இலக்கியக் கொள்கையானது பயன்பாட்டுக் கொள்கை உடையது. எந்த ஒரு இலக்கியத்திலும், மொழியிலும் கலையிலும் பயன்பாடு இருக்கவேண்டுமென்கிறார்.

இலக்கியமானது ஒழுக்கம், பகுத்தறிவு, அறிவு, சுயமரியாதை, மனிதநேயம் ஆகியவற்றை வளர்க்க வேண்டும். மொழி என்பது முற்போக்குத் தன்மை, படைப்பிலக்கிய ஆக்கம், அறிவுக் கூறுகள் எதிர்காலத் தேவை, நவீனமயமாக்குதல். கலை வெறும் பொழுதுபோக்காக மட்டும் இருக்கக் கூடாது, ஒழுக்கத்தைக் கற்றுத் தரவேண்டும், சுயமரியாதை உணர்ச்சியைத் தருவதாக இருக்க வேண்டும்.

## பெரியாரின் கருத்து துணிவுகள்

1. பெரியாரின் கூற்றுப்படி கலை கலைக்காக அல்லாமல் கலை வாழ்க்கைக்கு என்ற நிலை ஏற்பட வேண்டும்.
2. எவ்வகை இலக்கியமானலும், கலையானாலும் அவை பயன்பாடு உள்ளதாக இருக்க வேண்டும்.
3. முன்னொரு காலத்தில் கலைகளில் மட்டுமல்ல காலங்காலமாகப் புனித நூல்களாகக் கருதப்பட்ட இராமாயணம், மகாபாரதம், பெரிய புராணம் போன்ற நூல்களையெல்லாம் மறு ஆய்வு செய்யக் கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டதும், அதன் விளைவாக அந்நூல்களின் புனிதப்பாட்டுத் தன்மை நீக்கப்பட்டதற்கும் பெரியாரின் சிந்தனைகளே முழுமுதற் காரணமாகும்.
4. திராவிட மொழிகள் ஒரு உதிரத்தில் உதித்த ஓர் உதிரமேயாகும். தமிழ் மொழி மற்ற மாநிலங்களில் தெலுங்கு, கன்னடம், மலையாளமாகப் பேசப்பட்டு வருகிறது.
5. இலக்கியங்களை பிரச்சார கருவியாகப் பயன்படுத்தித் தமது கொள்கைகளை வளர்த்தல்.
6. எதிர்காலத் தேவைக்கேற்ப அறிவியல் சார்புடன் தமிழை மாற்றியது.

போன்ற இவையெலாம் பெரியாரின் அறக்கோட்பாடுகளாக முன்னிறுத்தப்படுகிறது (Kesavan, 1991).

முற்போக்குத் தன்மை கொண்டதாய், படைப்பிலக்கிய ஆக்கமுடையதாய், அறிவுக் கூறுகள் நிரம்பிதாய், எதிர்காலத் தேவைக்கருதி நவீனமயமாய் இருத்தல் அவசியம், கலை என்பது வெற்றுப் பொழுதுபோக்காக இருக்கக் கூடாது. ஒழுக்கத்தையும், சுயமரியாதையையும் உணர்ச்சியையும் தருவதாக இருக்க வேண்டும்.

இருண்டு கிடந்த அய்ரோப்பாவில் ஒளியேற்றப் பாடுபட்ட வால்டேர், பிராட்லா, இங்கர்சால் போன்ற பகுத்தறிவாளர்களுக்குக் கூட பாரம்பரியமான பிறவி இழிவுகளைப் பற்றிய சிந்தனை எழவில்லை. ஆனால் ஆயிரம் ஆண்டுகளாக மாந்தரிடையே புரையோடிவிட்ட ஏற்றத்தாழ்வெனும் புன்மைக்கு மருத்துவம் கண்டவர் பெரியார். தமிழகச் சூழலில் திராவிட இயக்கச் செயல்பாட்டுக்கானத் தேவைகள் இன்றையக் கால கட்டத்திலும் உயிர்ப்புடன் இருக்கின்றன. இந்துத்துவம் மேலோங்கி வரும் சூழலில் திராவிட இயக்கம் தனது கருத்தியலை இன்றும் கூர்மையாக்கிக் கொள்ள முன் வரவேண்டும். சாதியை ஒழிப்பது குறித்து நம் அனைவருக்கும் ஒத்த கருத்து இருந்தாலும் சாதி ஆதிக்கத்தை முதலில் நாம் களைய முன் வரவேண்டும்.

எனவே தமிழக அளவில் திராவிட இயக்க வேர்களை எப்போதும் வெட்டி விட முடியாது. திராவிட இயக்கம் தொடக்க கால முதலே வகுப்பு வாரி உரிமையை தூக்கிப் பிடித்ததன் விளைவாக விளிம்பு நிலை மக்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டது.

- தேவதாசி முறை ஒழிப்பு
- கைம்பெண் திருமணம்
- பெண்ணுகளுக்கான சம உரிமை

முதலியவற்றுக்காகப் பாடுபட்டது. நிர்வாகத்தில் பார்ப்பனர் அல்லாதார் இடம் பெறுவதற்கு திராவிட இயக்கம் முதன்மையான காரணம். மேற்கண்ட கருத்தியல்கள் மூலம் தந்தை பெரியார் இன்றும் நம்முடன் இருக்கிறார். அவரிடமுள்ள எதிர்க் கலாச்சாரக் கூறுகள் இன்று நம்மை வளப்படுத்தக் கூடியவை. பெரியாரின் சமதர்மம் என்னும் கருத்தியல் இன்று நமக்குப் பெரிதும் தேவை.

இந்தியாவின் நீண்டகால வரலாற்றில் வேதத்திற்கு எதிர்நிலையில் செயல்பட்ட வேத மறுப்பின் நீண்ட தொடர்ச்சியாகத் தான் பெரியாரை பார்க்க வேண்டும். பெரியாரின் திராவிட இயக்கம் சாதி, மதம், பார்ப்பனியம் ஆகியவற்றுக்கு முற்றிலுமான எதிர்நிலை மேற்கொள்கிறது. மனிதனுடைய பகுத்தறிவை அளவுகோலாகக் கொண்டு வாழ்வில் பல்வேறு இயல்புகளையும் நிலைகளையும், அமைப்புகளையும், சூழல்களையும், சிக்கல்களையும் அலசி ஆராய்ந்து உண்மைகளைக் கண்டறியத் தூண்டியவர்.

நம்முடைய இந்தியத் துணைக் கண்டத்தில் தனிப்பட்ட முறையில் செல்வாக்கு பெருகிய நிலையிலும் அண்ணல் காந்தியார் அவர்கள் அரும்பாடுபட்டு வளர்த்த காங்கிரசு எனும் பேராயக் கட்சியானது சுக்கு நூறாக உடைந்தது. காந்தியார், தான் உயிருடன் இருந்த போதே காங்கிரசைக் கலைத்து விடுங்கள். அதன் வேலை முடிந்து விட்டது என்று தன்னுடைய "அரிஜன்" ஏட்டில் எழுதினார். ஆனால் பெரியார் தான் வாழ்ந்த காலத்திலேயே தன்னுடைய கொள்கைகள் அறிஞர் அண்ணாவின் அரசால் 1970 வரை படிப்படியாக நடைமுறைப் படுத்தப்பட்ட அவரின் கோட்பாடுகளும் கொள்கைளும் இன்றைக்கு மேடை அளவில் மட்டுமே மக்களிடம் பேசப்பட்டு குறிப்பாகத் தேர்தல் நேரங்களில் வாக்குரிமை பெற வேண்டும் என்ற குறுகிய மனப்பான்மையோடு செயல்படுத்தப்பட்டு வருவது அன்றாட நிகழ்வாகிட்டது.

தங்களுடைய கட்சிகளில் "திராவிட" என்ற அடைமொழியைச் சேர்த்துக் கொண்ட அனைத்து அரசியலாரும் அத்தகைய ஒன்றுப்பட்ட நிலையைத்தான் இன்று வரை கடைப்பிடித்து வருகின்றனர். பெரியாரின் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்ற அனைத்துக் கட்சிகளும் அரசியல் ஆதாயத்தை விரும்பிச் சென்றவை தாம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இன்றைய காலகட்டத்தில் அவர்கள் அனைவரும் தடுமாற்றத்துடன் இயங்கி வருவதை நாம் ஒவ்வொரு நாளும் உள்வாங்கி வருகிறோம்.

- அரசியல் ஆதாயம்
- தன் நல வேட்கை
- தன் விளம்பரம்
- பொதுத் தொண்டில் ஒழுக்கமின்மை

போன்ற இத்தகைய இழிவான குணங்களுக்கு ஆட்பட்டு அந்த மனிதநேய மாமனிதரின் நிலையான கொள்கைகளை மக்கள் மன்றத்தில் எடுத்துக் கூறுவதை விட்டுவிட்டு அந்தந்த காலச் சூழலுக்கு ஏற்ப மக்களை திருப்திப்படுத்தும் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றனர்.

பெரியார் எடுத்துரைத்த பல அறிவுரைகளையும் கூர்நோக்குக் கருத்தியல்களையும் தமிழின இயக்கங்களும் திராவிடக் கட்சிகளும் புறக்கணித்து வருவது வேதனைக்குரியது. இனிமேலாவது எதிர்கால நலன் கருதி தமிழ்மொழி, பண்பாடு, நாகரிகம் குறித்த அவரது கருதுகோள்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். பெரியாரின் பெயரை முன்னெடுத்து அரசியலில் இலாபம் அடைவது மட்டுமே இலக்காகி விடக் கூடாது.

அரசு அதிகாரத்தைப் பயன்படுத்திய திராவிட அரசியலாளர்கள் பெரியாரியக் கருத்துகளை உண்மையாக மதிப்பவர்களாக இருப்பின்,

- அனைவரும் இலவசக் கல்வி என்பதை நிறைவேற்றி இருக்க வேண்டும்.
- தமிழ் மொழியைப் பயிற்று மொழி, ஆட்சி மொழியாக்குவதில் முழுமை பெற்றிருக்க வேண்டும்.
- பிற மொழியிலுள்ள அறிவார்ந்த நூல்களைத் தமிழுக்குக் கொணர்ந்திருக்க வேண்டும்.
- மதுவின் மூலம் அரசு வருமானத்தைப் பெருக்குவதை இழிவாக நினைத்திருக்க வேண்டும்.
- சாதியக் கட்சிகளோடு ஒட்டுமில்லை உறவுமில்லை என்பதை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.
- மதவாத உறவு அறுபட வேண்டும்.
- அறிவியலின் புதுமைகளை வரவேற்று ஆராதிக்க வேண்டும் போன்ற சமுதாய நலன்களைப் புறந்தள்ளி மக்களிடம் வாக்குகளை மட்டும் பெற நினைக்கும் போக்கு பெரியாரின் கொள்கைகள் இன்று நிலைபெற முடியாததற்குக் காரணமாக இருந்து வருகிறது.

இத்தகைய போக்கு தொடருமானால் வருங்காலத்தில் பெரியாரின் தனித்துவங்களும், அவரின் மனித நேயப் பண்புகளும் மறைந்து அந்த மாண்புமிகு மனிதரின் அடிச்சுவட்டை இந்த மண் மறந்து விடக் கூடிய அபாய நிலைதான் ஏற்படும்.

## முடிவுரை

எனவே தமிழினத்தைப் பழமைப் பிடியிலிருந்து விடுவித்து புதுமைக் காற்றை நுகரச் செய்த அவரின் அறிவுக் கோட்பாடுகளும், மானிடம் தழுவிய பொதுப் பணிகளும், சமுதாயத்தில் பிறவியின் பெயரால் உள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்றி சமதர்மப் பூங்காற்றை உலவச் செய்த சமனியத் தத்துவங்களும் மொழியையும், இலக்கியத்தையும் மக்கள் மயமாக்கிய அந்த மாமேதையின் மகத்துவமும் என்றென்றும் இம்மண்ணில் நிலைபெற வேண்டும். இந்த மானுடச் சமுதாயம் பயனுற வேண்டுமானால் போலிகளைக் களைத்து விட்டு, அனைத்துத் தரப்பினரும் விருப்பு வெறுப்புகளை மறுத்து, சாதியைக் கடந்து, மதத்தை மறந்து, பிரிவினையைத் துறந்து, மக்களின் மேன்மை ஒன்றையே இலக்காகக் கொண்டு சமுதாயப் பணியாற்ற முன் வரவேண்டும்.

## References

Aravanan, K.P., (1995) Tamil Samuthaya Varalaru, Puducherry, India.

Kesavan, K., (1991) Dravida Iyakkamum Mozhik Kolgaiyum, Annam veliyedu, Sivagangai, India.

Nannan, M., (1993) Periyariyal, Ilakkiyam, Gnayiru Pathippagam, Chennai, India.

Periyar, EVR., (1963) Mozhiyum Arivum, Periyar Suyamariyathai Pirachara Niruvanam, Chennai, India.

Periyar, EVR., (1963) Tamilum Thamizh Elakkiyamum, Periyar Suyamariyathai Pirachara Niruvanam, Chennai, India.

Periyar, EVR., (2007) Ramayana Kuripukal, Thanthai Periyar Dravidar Kazhagam, Chennai, India.

Thirunavukkarasu, K.D., (1977) Thirukkural Nidhi Ilakkiyam, University of Madras, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License